**CMP.No. 699/2024** நாள் : 12/02/2024

**தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், மங்கை ரெடிமேட்ஸ் உரிமமையாளர், செந்தில்குமார் டிபார்மெண்ட் எதிரில் வசிக்கும் வேலு மகன் முனிராஜ், வயது 30 ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறுவது யாதெனில்,**

நான் தொடர்ச்சியாக தீபாவளி சமயம் என்பதால் துணிகள் வாங்குவேன். கடந்த 23.10.2023 ம் தேதியன்று பெங்களூரில் உள்ள Hitech கார்மெண்ட்ஸ்ல் ரூ.1,33,150/– கொடுத்து என்னுடைய துணி கடைக்கு துணிகளை வாங்கினேன். மேலாளர் MSS Transport மூலம் அனுப்பி வைப்பதாக கூறினார். பின்பு அனுப்பிவிட்டதாகவும், புக்கிங் எண்ணையும் , என்னுடைய தம்பியின் மொபைல் போனுக்கு அனுப்பினார்கள். பின்பு 29.10.2023 ம் தேதி போனிற்கு டெலிவரி செய்யப்பட்டதாக ஒரு குறுஞ்செய்தி வந்தது. நான் உடனே MSS Transport க்கு சென்று கேட்டதற்கு டெலிவரி செய்துவிட்டதாக சொன்னார். பின்பு எனது தம்பி மேலாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது MSS Transport – க்கு அனுப்பிவிட்டதாக சொன்னார்கள். கடந்த 31.10.2023 ம் தேதி எதிரி டெலிவரி ஆகும் என்று அவரே ஒப்புக்கொண்டு ரசீதில் சீல் வைத்து கையொப்பம் இட்டார். பின்பு இரண்டு நாள் கால அவகாசம் வேண்டும் என்றும் தேடி தருவதாகவும் சொன்னார் அதை நம்பி வந்துவிட்டேன். பின்பு இரண்டு நாள் கழித்து MMS Transport மேலாளரிடம் கேட்டபொழுது அவர்கள் ஆயுதத்தை வைத்து மிரட்டினார்கள். கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். பின்பு நான் அங்கிருந்து வந்துவிட்டேன். இதனால் எனக்கு மனஉளச்சல் ஏற்பட்டது. இதனால் நீதிமன்றம் தக்க நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகிறேன்.